# வானவில்

# VAANAVIL

இதழ் 110 | மாசி 2020

ISSUE 110 | FEBRUARY 2020


# சிறுபான்மையின மக்கள் அடுத்த பொதுத் தேர்தலில் என்ன செய்யப் போகிறார்கள்?




***2019*** நொவம்பர் 16இல் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அதில் அப்போதைய எதிரணி சார்பாகப் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ச அமோக வெற்றியீட்டினார். அதைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவி விலக கோத்தபாய அணியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு பதவி ஏற்றது. ஆனால் அந்த அரசு சிறுபான்மை அரசு.

இந்த நிலைமையை மாற்றி பலமிக்க ஒரு அரசாங்கத்தை நிறுவுவதற்காக, அரசியலமைப்புப் பிரகாரம் நான்கரை ஆண்டுகளின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்ற அரசியல் அமைப்பு விதியைப் பயன்படுத்தி விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இத்தகைய ஒரு சூழலில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தமிழ் – முஸ்லீம் மக்கள் பொதுத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்ற கேள்வி பலரின் மனதில் எழுந்து நிற்கிறது.

ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற பெரும்பாலான (சுமார் 85 சதவீதம்) தமிழ் – முஸ்லீம் மக்கள் கோத்தபாயவுக்கு வாக்களிக்காது, ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாசவுக்கே வாக்களித்தனர். அதற்குக் காரணம் சஜித் நிச்சயம் தோல்வியடைவார் என்பது இந்த மக்களின் தலைமைகளுக்குத் தெரிந்திருந்தும், தமது சுயலாபம் காரணமாகவும், பாரம்பரியமான ஐ.தே.க. விசுவாசம் காரணமாகவும் அவருக்கே இந்த மக்களை வாக்களிக்க வைத்தனர்.

மக்களைப் பொறுத்தவரை எந்த நேரமும் அரசியல் சிந்தனையில் இருப்பவர்கள் அல்ல. தேர்தல் நெருங்கும் நேரங்களில் மட்டும் அரசியலில் ஆர்வம் காட்டுவார்கள். மற்றைய நேரங்களில் தாமுண்டு, தமது குடும்பம் உண்டு என இருந்துவிடுவார்கள். அவர்களுக்கு தேவையானதெல்லாம் பாதுகாப்பான, ஓரளவு வசதியான வாழ்வு, தொழில் வசதிகள், பிள்ளைகளின் படிப்பு என்பனதான்.

ஆனால் இந்த சிறுபான்மை இன மக்களுக்குத் தலைமைதாங்கும் அரசியல் தலைமைகள் அப்படியானவர்கள் அல்ல. அவர்களுக்கு தமது அரசியல் இருப்பை வைத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது. ஏனெனில் தமது நலன்களைப் பாதுகாக்க அது அவசியமானது. அவ்வாறு தமது அரசியல் இருப்பை வைத்துக்கொள்ள வேண்டுமானால் இனவாதத்தை பிரதான ஆயுதமாக எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும்.

அப்படிப் பார்க்கையில், தமிழ் இனவாத அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, தமிழ் இனவாதத்தை அற்றுப்போகாமல் தொடர்ந்து பேணுவதானால், மறுபக்கத்தில் சிங்கள இனவாதம் வீச்சுடன் இருக்க வேண்டும். அத்துடன் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகள்


**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**


**நூறு சிந்தனை மலரட்டும்**

# இந்திய குடியுரிமைச் சட்டத்திருத்தத்திற்கு எதிரான போராட்டம்

**பா**ரதிய ஜனதாக்கட்சி தலைமையிலான இந்திய மத்திய அரசு கொண்டுவந்த குடியுரிமை சட்டத்திருத்தத்துக்கு (சிஏஏ- Citizenship Amendment Act) எதிராக டெல்லியில் (ஷாகின் பாக் பகுதியில்) 70 நாட்களுக்கும் மேலாக முஸ்லிம்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்தப் போராட்டம் இப்போது குடியுரிமைச் சட்டத்திருத்தத்தை ஆதரிப்பவர்களுக்கும் எதிர்ப்பவர்களுக்கும் இடையேயான பெருங்கலவரமாக மாறியுள்ளது. வடகிழக்கு டெல்லியில் உள்ள ஜாப்ராபாத், மஜ்பூர், சாந்த்பாக், குரேஜ்காஸ், பாஜன்புரா ஆகிய பகுதிகளில் பெப்ரவரி 23ந் திகதியிலிருந்து நடக்கும் கலவரத்தில் இதுவரையில் 34 பேர் உயிரிழந்தும் 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். உயிரிழந்தோரிலும் காயமடைந்தோரிலும் பொதுமக்களும் பொலிசாரும் அடங்குவர்.

'நெருப்பு எரிந்து கொண்டிருக்கும் பெட்டியின் மீது அமர்ந்திருப்பதைப் போன்ற நிலைமை டெல்லியில் நிலவுகிறது. நான்கு பேருக்கு மேல் கூடுவதற்கு தடை விதிக்கும் வகையில், 144 தடை உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ள அந்தப் பகுதிக்கு காலையில் நாங்கள் சென்ற போது, ஒரு மார்க்கெட்டுக்கே ஒரு கும்பல் தீ வைத்திருந்தது. இந்த இடம் காவல் நிலையத்தில் இருந்து வெறும் 500 மீட்டர் தொலைவுக்குள் தான் இருக்கிறது. இவற்றில் பெரும்பாலான கடைகள் முஸ்லிம் சமூகத்தினருக்குச் சொந்தமானவை என்று அந்தப் பகுதியில் வசிக்கும் ஒருவர் கூறினார். ரயர்கள் எரிவதால் ஏற்பட்ட நாற்றமும், புகையும் அங்கு என்ன நடக்கிறது என்பதை உணர்த்தின. முழு காட்சிகளையும் படமாக்குவது எங்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது' என பிபிசி செய்தியாளர் ஃபைசல் முகமது அலி டெல்லியிலிருந்து பெப்ரவரி 25ந் திகதி கலவர நிலைமையைப் பதிவு செய்துள்ளார்.

இதற்கு முன்னதாக, டிசம்பர் 15ந் திகதியிலிருந்து குடியுரிமை சட்டத்திருத்தத்துக்கு எதிராகப் போராடும் ஜாமியா மிலியா பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் காவல்துறையும் இந்து தீவிரவாதக் காடையர்களும் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதியான டெல்லி ஒக்லா சட்டமன்றத் தொகுதியிலேயே இந்தப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் 9ந் திகதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட குடியுரிமை சட்டத்திருத்த மசோதாவுக்கு ஆதரவாக 334 உறுப்பினர்களும், எதிராக 106 உறுப்பினர்களும் வாக்களித்தனர். மக்களவையில் நிறைவேறிய குடியுரிமைச் சட்டத் திருத்த மசோதா, டிசம்பர் 11ந் திகதி மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட போது, மசோதாவுக்கு ஆதராக 125 உறுப்பினர்களும், எதிராக 105 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இரு அவைகளிலும் நிறைவேறிய மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு பின்னர் டிசம்பர் 12ந் திகதி சட்டமாகியுள்ளது.

குடியுரிமை சட்டத்திருத்தம் அமுல்படுத்தப்பட்டப் பின்னர் அஸ்ஸாமில் தொடங்கிய போராட்டம், திரிபுரா, மணிப்பூர், மேற்கு வங்காளம், மேகாலயா, டெல்லி எனப் பல்வேறு மாநிலங்களுக்கும் பரவியது. வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறும் எதிர்ப்புப் போராட்டங்களுக்கும், டெல்லி போன்ற பகுதிகளில் நடைபெறும் எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன. வடகிழக்கு மாநிலங்களில், வங்காள தேசத்திலிருந்து வரும் இந்துக்களும் திபெத்திலிருந்து வரும் புத்த மதத்தினரும் குடியேறினால், தங்கள் உரிமைகள் பாதிக்கப்படும் என மக்கள் அஞ்சுகின்றனர். டெல்லியில் உள்ள ஜாமியா மிலியா பல்கலைக்கழகத்தின் மாணவர்களோ, 'இந்திய அரசு ஒரு மனிதனைத் தனது மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்ட இந்தச் சட்டத்திருத்தம் உதவுவதாகவும், இந்திய அரசியலமைப்பின் மதச்சார்பற்ற கொள்கை மீதான தாக்குதல் தான் இந்தச் சட்டத்திருத்தம்' எனக் கூறுகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து வந்து இந்தியாவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் எளிதில் இந்தியப்பிரசையாக முடியாது. அவர்கள் பொதுவாக இந்தியாவிலிருந்து அகற்றப்படுவார்கள் அல்லது சிறை வைக்கப்படுவார்கள். இப்போது அமுலுக்கு வந்துள்ள குடியுரிமைச் சட்டத்திருத்தம் இதில் மாற்றத்தைக் கொண்டு வந்து, சட்டவிரோதமாக இந்தியாவிற்கு வரும் ஒருபகுதியினரை இந்தியக் குடிமக்களாக அங்கீகரிக்க வழிவகை செய்துள்ளது. 1955 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின்படி 11 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டவருக்கே இந்தியக்குடியுரிமை வழங்கப்பட்டது. அந்த அம்சத்தில்தான் தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச்சட்டத்தின் மூலம் பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தானை சேர்ந்த இந்துக்கள், சீக்கியர்கள், புத்த மதத்தவர், சமணர்கள், பார்சி இனத்தவர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு உரிய ஆவணங்கள் எதுவுமில்லை என்றாலும், இந்தியாவில் குறைந்தது 6 ஆண்டுகள் வசித்தாலே அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும். அதாவது கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31ந் திகதிக்கு முன்னர் குடியேறிய மேற்குறிப்பிட்டுள்ள இனத்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாம் என்று இந்தத் திருத்தம் கூறுகின்றது.

இந்தச்சட்டத்தின் நோக்கம் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிப்பதேயென்றால், முஸ்லிம் குடியேறிகளையும் இதில் சேர்த்து இருக்க வேண்டும். பாகிஸ்தான் அகமதியாக்களையும், மியான்மர் ரோஹிங்கயாக்களையும், இலங்கைத் தமிழர்களையும் (தமிழகத்தின் 24 மாவட்டத்தில் 107 முகாம்களில் இலங்கையில் இருந்து வந்த அகதிகள் 59716 பேர் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறார்கள்) சேர்க்காதது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன. மதச்சார்பின்மை எனும் இந்தியாவின் அடித்தளத்தையே இது சிதைத்து விடும் என்றும் இந்தத் மசோதாவை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன. இந்திய அரசமைப்பு சட்டம் மதத்தின் பெயரால் ஒருவரை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது என்றும், அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன. கேரளா, பஞ்சாப், ராஜஸ்தான், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்கள் இதுவரையில் குடியுரிமைச் சட்டத்திருத்தத்திற்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. மத்தியப்பிரதேசம், தெலுங்கானா போன்ற மாநிலங்களும் இந்தச் சட்டத்திருத்தத்திற்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றவுள்ளன.

இந்திய மதச்சார்பின்மை ஆபத்திலுள்ளது. இதனால் குடியுரிமைச் சட்டத்திருத்தத்தினையும், இச்சட்டத்தினை எதிர்த்துப் போராடும் முஸ்லீம்களுக்கு எதிராக, பா.ஜ.க அரசின் பின்னணியில் இந்துமதக் காடையர்களால் முடுக்கிவிடப்பட்டுள்ள டெல்லிக் கலவரத்தையும் நாங்கள் வன்மையாகக் கண்டனம் செய்கின்றோம்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# காந்தியை கொலை செய்த ஆர்.எஸ்.எஸ் – மறைக்கப்பட்ட வரலாறு



**72** ஆண்டுகளுக்கு முன்பு, *30.01.1948* இல் டெல்லி பிர்லா ஹவுசில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தி சுடப்பட்டு கொல்லப்பட்டார். இந்தத் தேசத்தின் முகம் அவர். சூரியனின் நேரடி பார்வையில் மக்கள் கூட்டத்திற்கு நடுவில் நிகழ்த்தப்பட்ட படுகொலை அது. காலத்துக்கும் இந்தியாவின் தலைகுனிவாக அமைந்திருக்கிற மரணம்.

காந்தியின் படுகொலை இந்திய அரசியலிலும், சமூகத்திலும் அதிர்வலைகளைக் கடுமையாக ஏற்படுத்தியது. ஒவ்வொரு இந்தியருக்கும் பதற்றமும் அச்சமும் தொற்றிக்கொண்டது. காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் விநாயக் கோட்சே தண்டனை பெற்று தூக்கிலடப்பட்டு இறந்து போனார். நாதுராம் கோட்சேயின் (Nathuram Godse) பின்புலம் யாவரும் அறிந்ததே. அவருடைய கொள்கை, காந்தியைக் கொன்றதன் காரணம் என யாவுமே சரித்திரத்தில் பதிவானவையே. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அவற்றைப் பற்றி பேசும்படியாகியிருக்கிறது. வரலாற்றைத் தவறாக மாற்றியமைக்கும்போது அதை சரிசெய்யும் எதிர்க்குரல் வலுவாக அமையத் தானே வேண்டும்!!

பாரதிய ஜனதாக்கட்சி அரசு ஆட்சிக்கு வந்தபிறகு கோட்சேவுக்கு புதுமுகம் கிடைத்திருக்கிறது. போராளியாகவும், தியாகியாவும், வழிகாட்டியாகவும் கோட்சே பொதுவெளியில் மாற்றப்படுகிறார். அவருக்கென பக்தர்கள் கூட்டம் பெருகுகிறது. அதன் உச்சமாக அவருக்கென கோயில் கட்டும் பணியையும் தொடங்கினார்கள். கோட்சே காந்தியைக் கொன்றதை நியாயப்படுத்தி, வீரச்செயலாக கொண்டாடுபவர்களுக்கு பாஜக அரசு அரசியலிலும், அதிகாரத்திலும் முக்கியத்துவம் தருகிறது.

மற்றொருபுறம் காந்தியை படுகொலை செய்தபோது கோட்சே ஆர்எஸ்எஸ் உறுப்பினராக இல்லை என்கிற செய்தியும் தொடர்ந்து அறிவுறுத்தப்படுகிறது. இதனை வரலாற்று ஆய்வாளர்ளும், நடுநிலையாளர்களுமே ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் கோட்சே தனது வாழ்நாளின் இறுதிவரை ஆர்எஸ்எஸ் உறுப்பினராகவே இருந்திருக்கிறார் என்று ஆதாரங்களுடன் விவரிக்கிறார் வரலாற்று ஆய்வாளரும், எழுத்தாளருமான தீரேந்திர கே ஜா.

அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரை The Caravan இதழில் வெளிவந்துள்ளது. மிக நீண்ட கட்டுரையான அதில் கோட்சே குறித்தும், இந்துத்துவ அமைப்புகள், காந்திக்கு எதிரான நிலைப்பாடு, அதன் பின்னணி போன்ற தகவல்களை அதன் சரியான பின்னணியோடு விளக்குகிறார். இவை யாவும் கோட்சே ஆர்எஸ்எஸ் உறுப்பினராகவே இறுதி வரை இருந்திருக்கிறார் என்கிற புள்ளியில் ஒன்றிணைகின்றன.


தீரேந்திர கே ஜா (Dhirendra K Jha) அரசியல் பத்திரிகையாளர், விமர்சகர். ஒவ்வொரு கட்டுரையையும், புத்தகங்களையும் மிக நீண்ட, ஆழமான தேடுதல் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதுகிறார். நாதுராம் கோட்சே காந்தியின் மரணத்தின்போது ஆர்எஸ்எஸ்சோடு தொடர்பு கொண்டிருந்தார் என்பதை அவர் பலவாறு தரவுகள், ஆதாரங்கள் மூலமாக விரிவாக்கியதின் சுருக்கமான வடிவமே இந்தக் கட்டுரை. இந்தக் கட்டுரைக்காக ஜா எட்டு மாத காலங்கள் ஆய்வுக்காக செலவழித்திருக்கிறார்.

கோட்சேக்கும் ஆர்எஸ்எஸுக்குமான தொடர்பினை அவரது மரண காலத்தில் இருந்து எடுத்து வைக்கிறார்.

நவம்பர் 15 *1949*. நாதுராம் விநாயக் கோட்சே தூக்கிலிடுவதற்கு முன்பு சமஸ்கிருத ஸ்லோகத்தை சொல்கிறார்.

நான்கு வரிகள் கொண்ட அந்த ஸ்லோகம் ஆர்எஸ்எஸின் அதிகாரப்பூர்வமான பிரார்த்தனைப் பாடல். *1938*ல் அவர் ஆர்எஸ்எசை விட்டு விலகியதாக நம்பப்படுகிறது.

ஆனால் இந்தப் பாடல் *1939*ல் தான் ஆர்எஸ்எஸின் பிரார்த்தனைப் பாடலானது. அதன்பிறகு தான் ஆர்எஸ்எஸ் தொண்டர்களிடையே இந்தப் பாடல் பரவியது. கோட்சேக்கு இந்தப் பிரார்த்தனைப் பாடல் தெரிந்திருக்கிறது என்பதும் தூக்கிலிடுவதற்கு முன்பு முக்கிய தருணத்தில் அவர் இதனைப் பாடியிருக்கிறார் என்பதும் அவர் ஆர்எஸ்எஸ்சுடன் தொடர்பில் இருந்திருக்கிறார் என்பதற்கான ஒரு ஆதாரமாக முன்வைக்கிறார் ஜா.



**தீரேந்திர கே ஜா**

காந்தியின் மரணத்துக்குப் பிறகு ஆர்எஸ்எஸ் மற்றும் அனைத்து இந்துத்துவ அமைப்பின் மீதும் தடை போடப்பட்டிருந்தது. அந்தத் தடையை நீக்கக்கோரி இந்துத்துவ தலைவர்கள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். அதனால் கோட்சேவை தங்களது அமைப்பைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்வதில் ஆர்எஸ்எஸுக்கு சிக்கல்கள் இருந்தன.

ஜா முன்வைக்கும் முக்கியத் தரவு ஒன்று கோட்சேயின் வாக்குமூலம். சிறப்பு நீதிமனறத்தில் நவம்பர் மாதம் தந்த வாக்குமூலத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு மார்ச் *1948* அன்று கோட்சே தந்த வாக்குமூலத்தை ஆய்வாளர்கள் கண்டுகொள்ளவில்லை. ஏனெனில் அது முழுவதும் மராத்தியில் இருந்தது. அந்த வாக்குமூலம் கிட்டத்தட்ட கோட்சேயின் சுய அறிமுக பத்திரமே. அதில் கோட்சே எங்கேயும் ஆர்எஸ்எஸிலிருந்து விலகியதைப் பற்றி சொல்லவில்லை. அதோடு மட்டுமல்லாமல் ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து மகா சபை என இரண்டு அமைப்புகளிலும் ஒரே நேரத்தில் சேவகம் செய்ததை உறுதி செய்துள்ளார். அந்த வாக்குமூலத்தின் *18, 19* ஆம் பக்கங்களில் இதனை விளக்குகின்றன.

“திரும்பவும் நான் இந்து மகாசபையின் பணியை மேற்கொள்ளத் தொடங்கினேன். அதே நேரம் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக்கிலும் இருந்தேன்” என்று குறிப்பிட்டிருக்கிறார் கோட்சே.

அதே போல் ஜாவுக்குக் கிடைத்த மற்றொரு ஆவணமும் இதனை உறுதி செய்கிறது. *11*, மே *1940*ன் ஆவணம் ஒன்று இப்படி சொல்கிறது. “N.V கோட்சே, டெய்லர், பூனாவிலிருந்து கலந்து கொண்ட ஆர்எஸ்எஸ் பங்கேற்பாளர்” என்கிறது அந்த ஆவணம். இது இந்துத்துவ மாநாடு ஒன்றின் பங்கேற்பாளர்களின் பதிவேட்டில் கிடைத்த ஆவணம்.

கோட்சே ஆர்எஸ்எஸ் உறுப்பினராகத் தான் இருந்தார் என்பதற்கான இந்த ஆவணம் காந்தி மரணத்துக்குப் பிறகு நாக்பூரில் இருந்த ஆர்எஸ்எஸ் தலைமையகத்திலிருந்து அகற்றப்பட்டது. அது தற்போது டெல்லி நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தில் காணக்கிடைக்கிறது.

ஆனால் நவம்பர் மாதம் கோட்சே கொடுத்த மற்றொரு வாக்குமூலத்தில் ஆர்எஸ்எஸில் இருந்து தான் விலகியதாக கோட்சே குறிப்பிடுகிறார். இதுவே சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில்தான் உள்ளது. வழக்கறிஞர் சொன்னதைக் கேட்டு சிலரைத் தப்புவிப்பதற்காக இப்படி சொல்லியிருக்கக்கூடும் என்கிற சந்தேகம் எழுகிறது.

*150* பத்திகள் அடங்கிய தனது வாக்குமூலத்தை கோட்சே ஐந்து மணிநேரமாக நீதிமன்றத்தில் வாசிக்கிறார். அவை முழுவதும் அவர் தயாரித்த வாக்குமூலம் அல்ல என பின்னாளில் வழக்கறிஞர; P.L இனாம்தார் உறுதி செய்கிறார். இவர் இந்து மகாசாபாவால் குற்றவாளிக்காக வாதாடிய வழக்கறிஞர் குழுவில் இருந்த ஒருவர். “நாதுராம் வழக்கில் பாம்பே வழக்கறிஞரான ஜம்னாதாஸ் மேத்தா தான் வாக்குமூலத்தை தயார் செய்வதில் உதவியாக இருந்தார்” என்றார் இனாம்தார். விநாயக் தாமோதர் சவார்கரின் நெருங்கிய நண்பர் ஜம்னாதாஸ் மேத்தா.

கோட்சே ஆர்எஸ்எஸ்–ஐ விட்டு விலகவில்லை என கோட்சேயின் சகோதரரான கோபால் உட்பட அவரது குடும்பத்தினர் எப்போதுமே சொல்லி வந்திருக்கின்றனர். *1994*ல் ஃபிரண்ட்லைன் இதழுக்கு அளித்த நேர்காணலில், “அவரது வாக்குமூலத்தில், தான் ஆர்எஸ்எஸ்–ஐ விட்டு விலகியதாக சொல்லியிருக்கிறார். ஆனால் கோல்வால்கர் மற்றும் ஆர்எஸ்எஸ் உறுப்பினர்கள் காந்தியின் மரணத்துக்குப் பிறகு கடும் சிக்கலுக்கு ஆளாகியிருந்தனர். அதனாலேயே விலகியதாகச் சொன்னார். ஆனால் அவர் ஆர்எஸ்எஸ்ஐ விட்டு விலகியதில்லை. எல்லா சகோதரர்களுமே ஆர்எஸ்எஸ் ல் தான் இருந்தோம். நாதுராம், தத்தாத்ரேயா, நான், கோவிந்த் என நாங்கள் எங்கள் வீட்டில் வளர்ந்ததை விட ஆர்எஸ்எஸ்ல் தான் வளர்ந்தோம் என்றே சொல்லலாம். எங்களுக்கு அது குடும்பம் போன்றது” என்று சொன்ன கோபால், ஆர்எஸ்எஸ் தன்னுடைய சேவகர்களை கண்டுகொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினர்.

தீரேந்திர கே ஜாவின் சிறப்பென்பது அவர் வெறும் தரவுகளில் இருந்து மட்டும் நம்மிடையே கருத்துகளை முன்வைப்பதில்லை. ஒரு சம்பவம் அல்லது ஒரு நபர் குறித்து எழுதுகிற போது அந்த பின்னணி, உளவியல் போன்றவற்றையும் சேர்த்தே ஆராய்கிறார். எதுவும் ஒரே நாளில் நடந்துவிடுவதில்லை எதற்குமே அதன் பின்னணியை ஆராய வேண்டும் என்கிற நோக்கில் தீரேந்திர ஜா மேற்கொள்கிற ஆய்வுகள், வெறும் ஆய்வுக்கட்டுரையாக இல்லாமல் வாசிப்பனுபவமாக மாறுகிறது.

இந்தக் கட்டுரையிலும் கூட நாதுராம் கோட்சேயின் சிறுவயது அனுபவங்கள் மூலம் அவர் எப்படி இந்துத்துவ கொள்கையில் ஆழமான பிடிப்பு கொண்டார் என்பதாக விளக்குகிறார். நாதுராம் தன்னை ஆண்மை மிக்கவராகக் காட்டிக் கொள்ளும் தேவை இருந்தது என்பதை அரசியல் உளவியலாளரும், சமூக விமர்சகருமான ஆஷிஷ் நந்தி இது குறித்து எழுதிய ஒரு கட்டுரை வழியாகவும் விளக்குகிறார் ஜா.

கோட்சேயின் பெற்றோருக்கு முதலில் பெண் குழந்தை பிறக்கிறது அதன் பின் அடுத்தடுத்து மூன்று ஆண்குழந்தைகள் பிறந்து இறந்தும் போகிறார்கள். இதனால் ஆண் குழந்தைகள் மேல் தங்கள் குடும்பத்துக்கு சாபம் இருப்பதாக நாதுராமின் பெற்றோர் நம்புகின்றனர். அடுத்து நாதுராம் பிறக்கிறார். விதியை ஏமாற்ற முடிவெடுக்கின்றனர் அவரது பெற்றோர். நாதுராமினை பெண் குழந்தை போல் வளர்க்கின்றனர். அவருக்கு மூக்குத்தி அணிவிக்கின்றனர். இது அவர்களது

குலதெய்வத்தை சாந்திபடுத்தும் என்று நம்புகின்றனர். அதனால் ராமச்சந்திரா என்கிற அசல் பெயர் கொண்ட கோட்சே மூக்கு குத்தியதால் நாதுராம் என்றழைக்கப்படுகிறார். பெண் குழந்தைகளுக்கான உடையையே தருகிறார்கள். சிறுமிகளுடன் மட்டும் விளையாடுகிறார் நாதுராம். பிறகு அடுத்து மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் நாதுராமின் பெற்றோருக்கு பிறக்கின்றனர்.

நாதுராமினால் தங்கள் குடும்பம் சாபம் நீங்கியதாக அவரது பெற்றோரும் நாதுராமும் நம்பத் தொடங்குகின்றனர். நாதுராமுக்கு தனது குலதெய்வத்தின் மீதும், மந்திர தந்திரங்கள் மீதும் பற்றுதல் ஏற்படுகிறது. தன்னிடம் தெய்வீக சக்தி இருப்பதாக நம்பத் தொடங்குகிறார். அவரது சகோதரிக்கு ஏற்பட்ட நீண்ட நாள் உடல் பிரச்சனையில் இருந்து நாதுராம் தனது சக்தியின் மூலம் சரி செய்ததாக நாதுராமின் சகோதரர் கோபால் தனது நினைவுக் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

சிறுவயதில் தனிமையையும் அனுபவித்திருக்கிறார் நாதுராம். பதினாறாவது வயதில் நாதுராம் மந்திரங்கள் ஓதுவதை நிறுத்துகிறார். நண்பர்களுடன் நேரத்தை செலவு செய்ததில் மெட்ரிக் தேர்வில் தோற்கிறார். அப்போது வருடம் 1929. இந்த நேரத்தில் இந்தியா குழப்பங்களின் உச்சத்தில் இருந்தது. 1922ல் ஒத்துழையாமை இயக்கத்தால் ஏற்பட்டிருந்த சீர்குலைவில் இருந்து இந்திய தேசிய காங்கிரஸ் மீளத் தொடங்கியிருந்தது. காந்தி அப்போது சுதந்திரப் போராட்டத்தின் தலைவராக இருந்தார். கோட்சே அப்போது இருபதுகளின் தொடக்கத்தில் இருந்தார். மாறி வரும் அரசியல் சூழலின் மேல் ஈர்ப்பும் கவனமும் கொண்டிருந்தார். தனது பகுதிகளில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் தானும் கலந்து கொண்டு மேடையில் பேச்சாளராகவும் ஆனார்.

அங்கு தான் அவர் மேடைப் பேச்சைக் கற்றுக்கொண்டார்.

மார்ச் 1948ஆம் ஆண்டு கோட்சே அளித்த வாக்குமூலத்தில் முக்கிய அம்சம் என்பது விநாயக் தாமோதர் சவார்கருடனான (Vinayak Damodar Savarkar) கோட்சேயின் தொடர்பு பற்றியது. சவார்கர் 1920களின் பிற்பகுதியிலும், 1930களின் முற்பகுதியிலும் ரத்னகிரியில் உள்ள தனது வீட்டில் இருந்தபடி தனது



**நாதுராம் கோட்சே**

சீடர்களுக்கு இந்துத்துவ ஒற்றுமை குறித்து பிரசாரமும், செயல்பாடுகள் பற்றியும் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். அவர் நோக்கம் பிரிட்டிஷை எதிர்ப்பதாக இல்லை. ஆனால் இஸ்லாமிய எதிர்ப்பாக இருந்தது. ஏனெனில் 1924 ஆம் வருடம் தான் அவர் பதினான்கு வருடங்கள் அந்தமான் சிறையில் ஆயுள் தண்டனையை முடித்து கருணை மனுவின் அடிப்படையில் வெளிவந்திருந்தார்.

1923ல் சிறையில் இருக்கையில் சவார்கர் Who is Hindu? என்கிற கட்டுரையை எழுகிறார். அதில் தான் இந்தியா இந்துக்களின் தேசம் என்றும், இந்துக்கள் ஒரே இனம் ஒரே மொழியான சமஸ்கிருதத்தைக் கொண்டவர்கள் என்றும் எழுதுகிறார். இந்துக்களுக்கான தனி தேசம் என்பதன் முதல் தெளிவான வாக்குமூலமாக இருந்தது இது தான். பதினேழு வருடங்களுக்குப் பிறகு தான் முகமது அலி ஜின்னா முஸ்லிம் லீக்கை தொடங்குகிறார். 1940களில் தான் இஸ்லாமியர்களுக்கான தனி நாடு என்கிற கோரிக்கை எழுகிறது. 1925ல் சவார்கர் மற்றும் பிற இந்துத் தலைவர்களின் எழுத்தால் ஈர்க்கப்படும் K.B ஹெட்கேவார், ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் அமைப்பை (ஆர்எஸ்எஸ்) நிறுவி இந்து நாடு, கலாசாரம் போன்றவற்றைக் குறித்து பரப்புகிறார்.

முதன்முறை சவார்கர் கோட்சேயை 1930களில் சந்திக்கிறார். கோட்சே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது குறித்த எரிச்சல் சவார்கருக்கு இருந்திருக்கிறது. அதனை கோட்சேவிடம் வெளிப்படுத்தவும் செய்கிறார்.

சவார்கருக்கு சித்பவன் பிராமணர்களிடையே செல்வாக்கு இருந்தது. இவர்கள் மராத்திய ஆட்சியாளர்களான பெஷாவர் வழி வந்தவர்கள். பெஷாவர்கள் வழிவந்த நம்பகமான ஒருவராகவே அந்த சமூகத்தினர் சவார்கரைப் பார்த்தனர். தன்னுடைய பக்தர்களை சவார்கர் இந்த வழியாகவே விரிவாக்குகிறார். சித்பவன் பிராமண வகுப்பைச் சேர்ந்த கோட்சே தனது சமூகத்தின் பெருமைமிகு அடையாளமான சவார்கரிடம் நெருங்குவதற்கு உற்சாகம் கொண்டிருந்தார். கோட்சேவுக்கு மற்ற இந்துக்களைக் காட்டிலும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இருந்தது. மற்ற பிராமண சமூகத்தினர் வேத, மந்திர அந்தணர்களாக இருந்தனர். சித்பவன் பிராமணர்கள் அரிதாக போர்முனையில் வீரர்களாக இருந்தனர். முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு எதிரான போரில் அவர்கள் அதிகம் ஈடுபட்டிருந்தனர். சித்பவன் வகுப்பை சேர்ந்தவர்களில் பாலகங்காதர திலகர் போன்றவர்கள் வீரத்திற்கானவர்களாய் அங்கிகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் வழி வந்தவராய் சவார்கரை மற்றவர்கள் நினைத்தது போல கோட்சேயும் நினைக்கத் தொடங்கியிருந்தார். சவார்கர் எழுதிய புத்தகங்கள் கோட்சேவை வசீகரித்தன. அவரது கவனம் சுதந்திரப் போராட்டத்தில் இருந்து இந்துத்துவத்தை நோக்கி திரும்பியது.

இதற்கிடையில் குடும்பம் வறுமைக்குள் செல்ல, வேறு வழியின்றி தையல் வேலையைத் தொடங்கினார் நாதுராம் கோட்சே. அதில் வருமானம் வந்த பிறகு மீண்டும் தன்னை இந்துத்துவ அமைப்புகளில் இணைத்துக் கொண்டார். ஆர்எஸ்எஸ் சேவகர்களுக்கு சீருடை தைத்துத் தருவது போன்ற வேலைகளில் ஈடுபட்டார். தானும் ஆர்எஸ்எஸ் சீருடையையே எப்போதும் அணிந்து கொண்டார். பின்னாட்களில் அவர் இந்து மகாசபையின் அங்கத்தினராக இருக்கும்போது கூட சீருடையை மாற்றினாலும் ஆர்எஸ்எஸ் தொப்பியை அவர் மாற்றவேயில்லை.

ஆர்எஸ்எஸ் ஒருபக்கம் வளர்ந்து கொண்டிருக்க, இந்து மகாசபையின் செயல்பாடுகளும் ஆர்எஸ்எஸ்சை ஒத்து இருந்தன. இரண்டு சங்கங்களுக்கும் இந்து நாடு என்பதே ஒரே கொள்கையாக இருந்தது. கோட்சேக்கு இந்து மகாசபையின் தொடர்பு 1938ல் கிடைத்தது. இந்து மகாசபை அப்போது ஹைதராபாத்



**விநாயக் தாமோதர் சவார்க்கர்**

நிஜாமுக்கு எதிரான கலகத்தில் ஈடுபட்டிருந்தது. அதனை அவர்கள் சத்யாகிரகம் என்று அழைத்துக் கொண்டனர். ஹைதராபாத் பகுதிகளில் வாழும் இந்துக்களுக்கு உரிமை வேண்டி இந்தப் போராட்டம் நடைபெற்றது என்றாலும், மைய அரசியலை நோக்கி நகர்வதே அதன் நோக்கமாக அமைந்திருந்தது. கலகக்காரர்கள் சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு குழுவுக்கும் தலைமையேற்றவர்கள் சர்வாதிகாரி எனும் பொருள்பட 'டிக்டேட்டர்' என்று அழைக்கப்பட்டனர். ஒரு குழுவின் டிக்டேட்டராக இருந்தார் கோட்சே. இந்து மகாசபையில் செயலாற்றிக் கொண்டிருக்கும்போதே ஆர்எஸ்எஸ் எப்படி எதிர்காலத்தில் இந்து மகாசபை போல ஒழுங்குடன் செயல்பட வேண்டும் என சவர்கருக்கு கோட்சே கடிதம் எழுதுகிறார். கலகம் காரணமாக சிறைக்கு செல்லும் கோட்சே அங்கே இந்துமகாசபை உறுப்பினர்களிடையே ஆர்எஸ்எஸ் உறுதிமொழியையும், உடல்கல்வியும் கற்றுத்தருகிறார். இதனை இந்து மகாசபையின் அப்போதைய பொதுச் செயலாளர் வி.ஜே தேஸ்பாண்டே தன்னிடம் தெரிவித்ததாக ஆர்எஸ்எஸ் பிரசாரகர் தபன் கோஷ் The Gandhi Murder Trial புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1940ல் இரண்டாம் உலகப்போரின் அச்சம் எங்கும் பரவியிருந்தது. எந்த அமைப்பும் தங்களது உறுப்பினர்களுக்கு சீருடை போன்றவற்றை அனுமதிக்கக்கூடாது என்று அரசு தடை செய்திருந்தது. ஒவ்வொரு இயக்கமும் கண்காணிப்புக்குள் இருந்தது. சில இடங்களில் இயக்கங்களுக்கு தடையும் இருந்தது. கண்காணிப்பு, தடை போன்றவற்றின் காரணமாக ஆர்எஸ்எஸ் தொண்டர்களிடையே சோர்வு ஏற்பட்டிருந்தது. இந்தியாவின் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்பது போய், தற்போது இயக்கத்தை வீழாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.

இந்து மகா சபா தன்னுடைய அங்கமாக இந்து ராஷ்ட்ரிய தளத்தை உருவாக்கியது. இதில் சவர்கருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் பதவிகளில் இருந்தார்கள். ஆர்எஸ்எஸ் இந்து ராஷ்ட்ரிய தளத்துக்கு ஆதரவு தெரிவித்தது. கோட்சே இந்த இந்து ராஷ்ட்ரிய தள அமைப்பில் வேகமாக முன்னேறினார். அவருக்கு செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது. இந்துத்துவ சங்கங்களும் அமைப்புகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்ப்பதை செய்யவேயில்லை. கோல்வால்கரின் சுயசரிதையை எழுதிய B.N பார்கவா இதற்கான காரணத்தை இப்படி சொல்கிறார், "மக்களை ஒன்றுபடுத்தி வலிமையாக்குவதுதான் முக்கியமே தவிர போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் அமைதியாக இருப்பது அல்ல" என்பதாக அவர்களது முடிவு இருந்ததாக சொல்கிறார்.

கோட்சேவுக்கு இப்போது நாராயண ஆப்தே நண்பராகிறார். காந்தி கொலைக்காக நாதுராம் கோட்சேயுடன் தூக்கிலிடப்பட்டவர் இந்த நாராயண ஆப்தே.

ஆப்தேயும், கோட்சேவும் இணைந்து 'அக்ரனி' என்கிற பத்திரிகையைத் தொடங்குகின்றனர். அதில் காங்கிரசையும், அஹிம்சை முறையைக் கையாண்டதற்காகவும், முஸ்லிம்களுக்கு சமமான உரிமை என்கிற கொள்கைக்காகவும் காந்தியை விமர்சித்து காட்டமாகக் கட்டுரை எழுதுகிறார் கோட்சே. இந்தப் பத்திரிகைக்கு ஆர்எஸ்எஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் நன்கொடை அளிக்கின்றனர். கோட்சேவுக்கு தான் வளர்ந்து வரும் ஒரு தலைவர் என்கிற எண்ணம் ஏற்படத் தொடங்குகிறது.

'அக்ரனி' பத்திரிகை வன்முறையைத் தூண்டுவதாக இருக்கிறதென்று தடை செய்யப்படுகிறது. தடையை நீக்கக் கோரி அப்போதைய பம்பாய் உள்துறை அமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாயை கோட்சே சில முறை சந்திக்கிறார். இதனை The Story of my Life என்கிற தனது சுயசரிதையில் தேசாய் குறிப்பிடுகிறார். அவர் கோட்சேயை இந்து மகாசபையின் உறுப்பினர் என்று எங்கும் குறிப்பிடவில்லை, மாறாக ஆர்எஸ்எஸ் உறுப்பினர் என்றே சொல்கிறார்.

பிறகு 'ஹிந்து ராஷ்டிரா' என்கிற பத்திரிகையை தொடங்குகிறார் கோட்சே. 'அக்ரனி' பத்திரிகையின் அதே போன்றதான கருத்துகளை உள்ளடக்கிய பத்திரிகையாகவே 'ஹிந்து ராஷ்டிரா' இருந்தது.

இந்திய பாகிஸ்தான் பிரிவின் போது பஞ்சாபிலும், வங்கத்திலும் ஏற்பட்ட வன்முறை மற்றும் பூனா இந்துக்களிடையே அவர் ஏற்படுத்த நினைத்த மதரீதியான தூண்டுதல் தோல்வியடைந்தது போன்றவை கோட்சேவை நிதானமிழக்கச் செய்தன. அதனால் இந்திய சுதந்திரக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளாமலே இருந்திருக்கிறார். அது போன்றதான சமயத்தில் இந்து மகாசபையின் உறுப்பினரான M.S தீக்ஷித்திடம் அவர் உரையாடியதை தீக்ஷித் தனது புத்தகமான Mi Ma Sri இல் பதிவு செய்திருக்கிறார்.

"பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மராத்திய துறவி தியாநேஸ்வரர் ஏன் மரணத்தை விரும்பி ஏற்றுக்கொண்டார் என்பது தெரியுமா?" என்று கேட்டிருக்கிறார் கோட்சே.

"தெரியாது"

"நான் சொல்கிறேன். எத்தனையோ துன்பங்களுக்கு இடையிலும் அவர் கர்ம யோகத்தை போதித்து வந்தார். ஆனால் மக்கள் அதற்கு செவிகொடுககவில்லை. இது அவரை கோபப்படுத்தியது. அதனால் அவர் ஆழ்ந்த தியானத்தின் வழியாக சமாதி நிலையை அடைந்துவிட்டார். ஒருவகையில் இது தற்கொலை தான். இதை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா?" என்று கேட்டிருக்கிறார்.

"இது அவ்வளவு பெரிய விஷயமா?"

"அப்படியென்றால் விட்டுவிடுங்கள்"

தன்னைப்பற்றிய உயர்ந்த சிந்தனை கொண்ட ஒருவர் அது தளரும்போது ஏற்படுகிற சுயபச்சாதாபத்தை கோட்சேயிடம் பார்த்ததாக தீக்ஷித் பதிவு செய்கிறார்.

இந்திய பாகிஸ்தான் பிரிவினையால் பாதிக்கப்பட்ட மக்கள் காந்தி மரணமடைந்தால் மகிழ்ச்சியடைவார்கள் என்றே கோட்சே கணித்திருந்தார். ஆனால் காந்தியின் மரணமென்பது



**காந்தி கொலை வழக்கு விசாரணையில் நாதுராம் கோட்சே, நாராயண ஆப்தே**

காந்தியை மாபெரும் அசைக்க முடியாத இடத்துக்கு கொண்டு செல்லும் என்பதை கோட்சே எதிர்பார்த்திருக்கவில்லை.

வழக்கறிஞர் இமான்தார் தன்னுடைய நினைவுக்குறிப்பில் இப்படி எழுதுகிறார், "நீதிமன்றத்தில் கோட்சே சவார்கரிடம் பேசவில்லை. இருவரும் அருகருகே அமர்ந்திருந்தாலும் கூட ஒருவருக்கொருவர் திரும்பிக் கூட பார்த்துக் கொள்ளவில்லை. நாதுராம் மற்றும் மற்ற குற்றவாளியுடன் சதிச்செயலில் ஈடுபட்டதாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவர் இப்படி நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கலாம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

காந்தியின் மரணம் என்பது இந்துத்துவ அமைப்புகளை தளரச் செய்தது, செயல்படாமல் ஒடுக்க வைத்தது. சில மாதங்களிலேயே இந்து அமைப்புகளுக்கான தடை நீங்கியபோதும் உடனடியாக அதிரடியாக எதுவும் சொல்ல முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். அதனால் தான் அவர்கள் தங்கள் இருப்பை மீண்டும் நிலைநிறுத்த வேண்டி அயோத்தியில் ராமர் கோயில் விவகாரத்தைக் கையிலெடுத்தனர் என தீரேந்திர கே ஜா AYODHYA THE DARK NIGHT என்கிற தன்னுடைய மற்றொரு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தீரேந்திர ஜாவின் இந்தக் கட்டுரை இன்றைய காலத்தில் எடுக்கப்பட்ட மாபெரும் முயற்சி. சரித்திரத்தைத் திரிப்பது கொஞ்சம் எளிது தான். காந்தி படுகொலை செய்யப்பட்டு இறக்கவில்லை, இயற்கை மரணத்தில் உயிரிழந்தார் என பள்ளிக் குழந்தைகளுக்கு போதிப்பதன் வழி வரலாறை மாற்ற அரசு நினைக்கலாம். ஆனால் சரித்திரத்தின் உண்மை என்பது எவர் மூலமாகவாவது தொடர்ந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டு தான் இருக்கும். அதன் வெளிப்பாடே இந்தக் கட்டுரை.

The Caravan இதழில் இந்தக் கட்டுரை வெளிவந்தபோது சலசலப்பு எழுந்தது. கவனிக்கப்பட்டது. கடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது ராகுல் காந்தி, கோட்சேயை ஆர்எஸ்எஸ் உறுப்பினர் என்றபோது அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றம் ராகுல் காந்தியை மன்னிப்பு கோரச்சொல்லிக் உத்தரவிட்டது. ராகுல் காந்தி அதற்கு மறுத்ததால் வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது. வரலாறை மாற்றிப் பேசுபவருக்கு கொடுக்க வேண்டிய தண்டனையை உண்மையைப் பேசுபவருக்குத் தந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் வெளிவந்துள்ளதாலும் இந்தக் கட்டுரை மிக அவசியமானதாகிறது.

கட்டுரையின் ஆங்கில மூலம்: https://caravanmagazine.in

**தமிழில் : ஜா. தீபா**

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதனை நேசிக்கிறோம். மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச் சாதாரண மனித இன்பங்களின் மதிப்பையும் நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவே தான், மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து, அதாவது, பயங்கரப் போரின் துன்ப துயரங்கள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, மகிழ்ச்சியும் நிறைவும், ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு, இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக, எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்குவதில்லை. லாபம், லாபம், மீண்டும் லாபம்! இதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பு, மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற ஒரு அமைப்பு மனிதத் தன்மை அற்றதாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு ஒரு கம்யூனிஸ்டுக்கு, மக்களின் மனிதத் தன்மை பறிக்கப்படுகின்ற பொழுது, சும்மா இருக்க உரிமை உண்டா? இல்லை. எனவேதான், நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதனுக்காகப் போராடுவதில், தங்கள் முழு வலிமையை பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின் வாங்குவதில்லை!

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சமாதானத்தை நேசிக்கிறோம். எனவேதான் நாங்கள் போராடுகிறோம். போர் மூளுவதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம். சில தனி நபர்களின் சொந்த நலன்களுக்காக நடைபெறும் பயங்கரப் போரில் கோடிக்கணக்கான மக்கள் மாண்டு மடிவதற்கும் மனித வாழ்வுக்கு அவசியமான செல்வங்களை அழிப்பதற்கும் காரணமாகும் ஒரு குற்றவாளி கூட இல்லாத உலக அமைப்புக்காக நாங்கள் போராடுகிறோம். ஒருவாய்ச் சோற்றுக்காக மனிதனை எதிர்த்து மனிதன் சண்டை போட வேண்டிய நிலைமை எங்கே இருக்கிறதோ அங்கே சமாதானம் இருக்காது. இருக்கவும் முடியாது. எனவே தான் உண்மையான சமாதானத்திற்காக, மனித சமுதாயத்தின் புதிய ஸ்தாபனத்தால் உத்தரவாதம் செய்யப்படும் சமாதானத்திற் காகப் போராடுவதில் தங்கள் முழு உரிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

***- ஜூலியஸ் பூசிக்** பிறந்த நாள், 23 பெப்ரவரி*

# விக்னேஸ்வரன் தலைமையிலான அணி மாற்று அணியாகுமா?

முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் புதிய தமிழ் அரசியல் கூட்டணி ஒன்று உருவாகியிருக்கிறது. இந்தக் கூட்டணியில் விக்னேஸ்வரன் தலைமையில் சுரேஸ் பிரேமச்சந்திரன், என்.சிறீகாந்தா, அனந்தி சசிதரன் ஆகியோரின் தலைமையிலான கட்சிகள் இணைந்துள்ளன.

இப்படியான ஒரு கூட்டணி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக உருவாகும் என்பது பலராலும் எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் ஒரு சிறிய வித்தியாசம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதில் இணைய மறுத்துள்ளமைதான். பொன்னம்பலம் இணைய மறுத்தமைக்கு அரசியல் ரீதியிலான கருத்து முரண்பாடுதான் காரணம் எனச் சொல்ல முடியாது. அது பெரும்பாலும் தனிநபர் முரண்பாடு சம்பந்தப்பட்ட காரணம்தான். எனவே அவர் வடக்கு அரசியலில் எந்தவிதமான காத்திரமான பங்களிப்பையும் வழங்க முடியாதவராகவே இருக்கப் போகின்றார்.

விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியின் உதயத்துடன் பிற்போக்கு தமிழ் தேசியவாத சக்திகள் மூன்று அணிகளாகப் பிளவுண்டுள்ளதைக் காண முடிகிறது. அதேநேரத்தில் விக்னேஸ்வரன் தலைமையிலான அணி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு மாற்றாகவும், சவாலாகவும் சிலரால் பார்க்கப்படுகிறது. ஆனால் அது உண்மைதானா என்ற கேள்வியை எழுப்ப வேண்டிய தேவை உள்ளது.

ஒரு அணிக்கு இன்னொரு அணி மாற்று என்றால், அதன் பிரதான அர்த்தம் கொள்கை சம்பந்தப்பட்ட மாற்றாக இருக்க வேண்டும். அடுத்ததாக தலைமையின் சிறந்த குணாம்சம் சம்பந்தமாக இருக்க வேண்டும். இந்த இரண்டும் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணிக்கு இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

முதலாவதக, விக்னேஸ்வரன் தலைமையில் சேர்ந்திருக்கிற கட்சிகளும், கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சியும் முன்னர் தமிழ் தேசியக்



கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகள்தான். எனவே இவர்களுக்குள் கொள்கைரீதியில் அடிப்படை முரண்பாடு எதுவும் கிடையாது.

**புனிதன்**

இவர்களுக்கிடையிலான முரண்பாட்டின் பிரதான தோற்றுவாய் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான தமிழரசுக் கட்சி மற்றைய கட்சிகளை மதிக்காமல் 'பெரியண்ணன்' தோரணையில் தன்னிச்சையாக செயல்பட்டதுதான். தமிழரசுக் கட்சி தனது தேர்தல் வெற்றிகளுக்கு மற்றைய கட்சிகளைப் பயன்படுத்திய அதேநேரத்தில் மற்றைய கட்சிகளுக்கு உரிய இடத்தை வழங்கத் தயாராக இருக்கவில்லை.

உதாரணமாக, தென்னிலங்கை அரசியல் கட்சிகளை எடுத்துக்கொண்டால், பிரதான கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, தேர்தலுக்காக ஏனைய கட்சிகளை இணைத்து கூட்டணிகளை உருவாக்கும்போது அந்தக் கூட்டணிக்கு பொதுவான ஒரு பெயரை வைப்பது மட்டுமல்லாது அந்தக் கூட்டணியை தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதுடன், பொதுவான சின்னங்களின் கீழும் போட்டியிட்டு வந்துள்ளன.

தென்னிலங்கைக் கட்சிகளிடம் உள்ள இந்த குறைந்தபட்ச ஜனநாயக நடைமுறை ஒருபோதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் அமைப்பாக தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறும், ஒரு பொதுச்சின்னத்தில் போட்டியிட ஏற்பாடு செய்யுமாறும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) தலைமையிடம் பங்காளிக் கட்சிகள் பல தடவை வலியுறுத்திய போதும், தலைமை அதற்குத் தயாராக இருக்கவில்லை. அப்படிப் பதிவு செய்து பொதுச்சின்னத்தில் போட்டியிட்டால் தமிழரசுக் கட்சியின் 'பிடி' கூட்டமைப்புக்குள் இல்லாமல் போய்விடும் என்ற பயம் காரணமாக சம்பந்தன் – மாவை – சுமந்திரன் மும்மூர்த்திகள் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

தமிழரசுக் கட்சியின் இந்த ஆதிக்க மனோபாவம் காரணமாகவே சில கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டு பிரிந்து செல்லக் காரணமாயிற்று. ஆனால் பிரிந்து சென்ற கட்சிகள் தாம் கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து சென்றதற்கான காரணத்தைச் சொல்லும் போது ஏதோ கொள்கை முரண்பாடு காரணமாகப் பிரிந்து சென்றதாகத்தான் கூறிக் கொள்வார்கள்.

அப்படி அவர்கள் சொல்லும் கொள்கை முரண்பாடு என்னவென்று பார்த்தால், கூட்டமைப்பின் வேகம் போதாது என்பது ஒன்று. மற்றையது கடந்த ஐ.தே.க. அரசாங்க காலத்தில் அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டது என்பது. இந்த இரு விடயங்களையும் பொறுத்தவரை, ஆரம்ப காலம் முதல் எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரே மாதிரியாகத்தான் செயல்பட்டு வந்திருக்கின்றன.

அதாவது, தமிழ் கட்சிகளின் வரலாற்றை எடுத்து நோக்கினால் அவைகள் சில விடயங்களில் ஒரே மாதிரியான

கொள்கைத் தொடர்ச்சியைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். அவை என்னவென்று பார்த்தால்:

தமிழ் மக்களின் வாக்குகளை ஏமாற்றிப் பெறுவதற்காக மோசமான தமிழ் இனவாதம் பேசுதல்.

நாட்டின் முற்போக்கு – ஜனநாயக கட்சிகளான இடதுசாரிக் கட்சிகளுக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிராக வர்க்க அடிப்படையில் பிற்போக்கு ஐக்கிய கட்சியுடன் கள்ள உறவு வைத்திருத்தல்.

சர்வதேச ரீதியாக சோசலிச அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடன் உறவு வைப்பதற்குப் பதிலாக ஏகாதிபத்திய சக்திகளுடன் உறவைப் பேணுவது.

இந்த நிலைப்பாட்டை அன்றைய தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள் மட்டுமின்றி, இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அச்சொட்டாகப் பின்பற்றி வருகின்றது. அதுமட்டுமின்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகத் தேர்தல் கூட்டணி அமைத்துள்ள விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினரும் சரி, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியும் சரி, இதே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். தமிழினத்தின் சாபக்கேடே இதுதான்.

இந்த நிலைமையில், விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான பிரதான அணியாக இருக்கும் என்பது சரியான கணிப்பீடு அல்ல. வேண்டுமானால் விக்னேஸ்வரனின் அணி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளில் ஒரு பகுதியைப் பிரித்தெடுத்து அந்த வாக்கின் மூலம் நாடாளுமன்றத்துக்கு ஒரு பிரதிநிதியை அனுப்பலாம். அதற்கு அப்பால் அந்த அணி கொள்கை அடிப்படையில் ஒரு மாற்று அணியாக இருக்க முடியாது.

கடந்த சில ஆண்டுகளின் வரலாற்று அடிப்படையிலும், தற்போதைய வடக்கின் கள நிலவரப்படியும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கை அடிப்படையிலான மாற்று அணி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மட்டுமே. இந்த உண்மையை அடுத்த பொதுத்தேர்தலின் பின்னர் கண்டுகொள்ள முடியும்.

# நவீன தொழில்நுட்பங்களில் ‘சிவப்பு புத்தகம்’

**உ**லகின் பல நாடுகளில் ‘சிவப்பு புத்தக தின’ கொண்டாட்டத்துக்கான தயாரிப்புகள் நடைபெற்று வருகின்றன. இப்போதுதான் காரல் மார்க்ஸ் 200 ஆவது ஆண்டை ஒட்டி உலகம் முழுவதும் பல நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. ஏங்கெல்ஸ் 200 ஆவது நூற்றாண்டு நிறைவு விழா அடுத்த ஆண்டு நடக்கவுள்ளது. இவர்கள் இருவரும் சேர்ந்து வடித்துக் கொடுத்த கம்யூனிஸ்ட் அறிக்கை வாசிப்பு மீண்டும் முன்னுக்கு வந்திருப்பது மிகச் சரியான, அவசியமான ஒன்றாகும்.

1848 ஆம் ஆண்டில் இந்த புத்தகம் எழுதப்பட்ட சில வாரங்களில் பாட்டாளிவர்க்கத்தின் குறிப்பிடத்தக்க எழுச்சி நடைபெற்று, பிறகு அது பின்னுக்குச் செல்வதும் நடந்தேறியது. மீண்டும் 25 ஆண்டுகளுக்கு பிறகு இந்த புத்தகம் வெளிச்சத்திற்கு வந்தது. இடைப்பட்ட காலத்தில் பல்வேறு வேட்டையாடல்களையும், அடக்கு முறைகளையும் தொழிலாளி வர்க்க இயக்கம் எதிர்கொண்டது. இவ்வாறு தொழிலாளி வர்க்கம் அவநம்பிக்கையால் துவண்டு போய், பல்வேறு அரசியல் முழக்கங்களால் திசைதிருப்பப்பட்டு, உள்ளுக்குள்ளேயே மோதவைக்கப்பட்டு, பலவீனமாக்கப்படும் தருணங்களில் எல்லாம் அதற்கு புத்துயிரூட்டி, புது நம்பிக்கை பாய்ச்சக் கூடிய புத்தகமாக கம்யூனிஸ்ட் அறிக்கையே இருந்துவருகிறது.

கம்யூனிஸ்ட் அறிக்கை எழுதப்பட்ட காலத்தை விடவும் மிக மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளி வர்க்கம் பல்கிப் பெருகியிருக்கிறது. விவசாயிகளாக, விவசாயத் தொழிலாளர்களாக, நடுத்தர வர்க்கத்தாராக, குட்டி முதலாளிகளாக இருந்த பல்வேறு வர்க்கத்தார் தங்கள் உடைமைகளை இழந்து பாட்டாளி வர்க்கப் படையணியில் சேர்ந்துள்ளார்கள். உலகின் செல்வக் குவிப்பு அதிகரித்துக் கொண்டே வரும்போது, இன்னொரு பக்கத்தில் ஒட்டாண்டிகளாக, வேலையற்றோராக மிகப்பெரும் பகுதியினர் உருவாக்கப்படுகின்றனர். இந்த நிலைமைகளை புரட்சிகரமாக மாற்றியமைக்கும் வல்லமையுள்ள பாட்டாளி வர்க்கத்தின் கைகளில், கம்யூனிஸ்ட் அறிக்கையும், மார்க்சியத் தத்துவத்தையும் சேர்ப்பது நம் கடமை.

அனைத்து நவீன வடிவங்களிலும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் தற்காலத் தமிழ் மொழியாக்கம் மாற்றப்படுகிறது. செயலி வடிவில் அறிக்கையை பெறுவதற்கு கூகுள் பிளே ஸ்டோரில் Marxist Linrary என தேடி ஏற்றிக்கொள்ளலாம். கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதல் அத்தியாயம், சிவப்பு புத்தக தின அமர்வுகளில் வாசிக்கப்படவுள்ளது. அதற்காக ஒலிப் புத்தகம் இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது. Marxist Reader செயலியை ஏற்றிக் கொள்வதன் மூலம் இந்த ஒலிப் புத்தகத்தை கேட்க முடியும்.

இணையதள முகவரி:

marxist.tncpim.org/communist-manefesto-tamil-audio-book/

கம்யூனிஸ்ட் அறிக்கையை கற்போம், பரவலாக்குவோம்.

---

முதலாளித்துவ வர்க்கம் நாட்டுப்புறத்தை நகரங்களின் ஆட்சிக்கு உட்படுத்திவிட்டது. மாபெரும் நகரங்களை உருவாக்கியுள்ளது. நாட்டுப்புற மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் நகர்ப்புற மக்கள்தொகையைப் பெருமளவு அதிகரிக்கச் செய்துள்ளது. இவ்வாறாக, மக்கள் தொகையில் கணிசமான ஒரு பகுதியினரைக் கிராம வாழ்க்கையின் தனிமைப்பாட்டிலிருந்து மீட்டுள்ளது. நாட்டுப்புறம், நகரங்களைச் சார்ந்திருக்குமாறு செய்துள்ளதைப் போன்றே, அநாகரிக நிலையிலும் அரை-நாகரிக நிலையிலுமுள்ள நாடுகள் நாகரிக நாடுகளைச் சார்ந்திருக்குமாறும், விவசாயிகளின் நாடுகள் முதலாளித்துவ நாடுகளைச் சார்ந்திருக்குமாறும், கிழக்கு நாடுகள் மேற்கு நாடுகளைச் சார்ந்திருக்குமாறும் செய்துள்ளது.


மக்கள்தொகையும், உற்பத்திச் சாதனங்களும், சொத்துகளும் சிதறுண்டு கிடக்கும் நிலையை முதலாளித்துவ வர்க்கம் மேலும் மேலும் ஒழித்துக்கொண்டே வருகிறது. மக்கள் தொகையை ஆங்காங்கே குவித்து வைத்துள்ளது. உற்பத்திச் சாதனங்களை மையப்படுத்தியுள்ளது. சொத்துகளை ஒருசிலர் கையில் குவிய வைத்துள்ளது.

**–‘முதலாளிகளும் பாட்டாளிகளும்’**
**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**

# கொரோனா அரசியல்

சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தி உயிரைக் குடிக்கும் புதுவகை கொரோனா வைரஸ் தற்போது ஆசியக் கண்டத்தில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வைரஸ் வேகமாக பரவும் என்பதை உணர்ந்துள்ள மக்கள் சீனம், இந்த வைரஸ் பாதிப்பு உருவான உகான் நகரத்தை முற்றாக சீல் வைத்துள்ளது. நியூயார்க்கை விட பெரிய நகரம் இது. அனைத்து நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத் தப்பட்டுள்ளன. வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ள *4494* பேரையும் பாதுகாத்திட விரிவான ஏற்பாடுகளை செய்திருப்பது மட்டுமல்ல, வெறும் *9* நாட்களில் சுமார் *7* ஆயிரம் தொழிலாளர்கள் இரவு, பகல் என்று பாராமல் *1000* படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனையையே கட்டிவிட்டது சீனா.

வழக்கமான சளி, இருமலில் துவங்கும் இந்த கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆங்கில மருத்துவ உலகில் மருந்து இல்லை என்று தகவல்கள் பரவியுள்ளன. அதே வேளை இந்திய மருந்து களான அமிர்தவல்லியும், துளசியும் இதற்கு பயன் படும் என்று பல மருத்துவர்கள் கூறி வருகின்றனர். இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, கொரோனா வைரசை முன்வைத்து ஓர் அரசியலும் கட்டமைக்கப்படுகிறது. அது அமெரிக்க ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்துவிடுகிற ஒரு சூழ்ச்சி அரசியல். கொரோனா வைரஸ் பாதிப்பு சீனாவில் துவங்கியது என்றவுடன், சீனாவே ஒரு தீண்டத் தகாத நாடு என்ற அளவிற்கு அமெரிக்காவும் அதன் ஆதரவு ஊடகங்களும் மிகத் தீவிரமான பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன. சீனா, வைரஸ் பாதித்தவர்களை தனிமைப்படுத்துகிறது என்றும், கொடுமைப்படுத்துகிறது என்றும் அந்நாட்டிற்கு பல முனைகளில் தடை விதிக்க வேண்டுமென்றும் அமெரிக்கா கூப்பாடு போட்டு வருகிறது. ஆனால் உண்மையில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டவர்களை பாதுகாக்கும் விதமாகவும், மற்றவர்களுக்கு அது பரவாமல் தடுக்கும் விதமாகவும், மிகப் பெரிய மருத்துவ வளையத்தையே உருவாக்கி, நாடு முழுவதும் முழுமையான நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கி




விட்டிருக்கிறது சீனா என்ற உண்மையை ஊடகங்கள் சொல்ல மறுக்கின்றன.

உயிர் குடிக்கும் கொரோனா வைரஸ் பாதிப்பிலும் கூட பெரும் எண்ணிக்கையில் மரணம் ஏற்படாமல் தவிர்த்திருக்கிறது சீனா. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கொரோனா வைரசே இல்லாமல் சாதாரண சளி, காய்ச்சலால் பாதிக்கப்பட்டு முறையான சிகிச்சை கிடைக்கப் பெறாமல் அது இன்புளுயன்சாவாக முற்றி *30* ஆயிரம் பேர் அமெரிக்காவில் மரணமடைந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை எங்கே போய்ச் சொல்வது?

*1996*ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் *67* விதமான பெரும் நோய்கள் பரவியுள்ளன. ஒவ்வொன்றையும் மருத்துவ விஞ்ஞானம் கட்டுப்படுத்தி வருகிறது. ஆனால் அதேவேளை ஒவ்வொன்றின் பின்னாலும் பெரும் கார்ப்ப ரேட் மருத்துவ வணிகமும் அரங்கேறி வருகிறது. இப்போது இந்த நோயை மக்கள் சீனம் கட்டுப்படுத்துவதற்கான முழு வீச்சில் இறங்கியிருப்பதைத்தான் அமெரிக்காவாலும் பெரும் கார்ப்பரேட்டுகளாலும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

**நன்றி: 'தீக்கதிர்'**

---

கொரோனா வைரஸால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள ஹுபெய் மாநில மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் விதமாக சீன தேசத்தின் பல்வேறு இடங்களில் இருந்து *30* ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்கள் அங்கு சென்றுள்ளனர். பெப்ரவரி *20*ஆம் நாள் வரை சீனப் பெருநிலப்பகுதியில் இவ்வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களில் *18,264* பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஆனால் மருத்துவப் பணியாளர்களில் சிலர் உயிரிழந்துள்ளனர். பொறுப்புணர்வு, சுயநலமின்றி மற்றவருக்கு உதவியளிப்பது, அன்புணர்வு, கருணை ஆகியவை மருத்துவ நன்நெறிகளில் அடக்கம்.

## சீனா பற்றிய சூழ்ச்சி கருத்தின் தீய நோக்கம் என்ன?

கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில், சீனாவுக்கு எதிரான சில மேலை நாட்டு சக்திகள், இந்நோய் குறித்த வதந்தியைப் பரப்பி, நோய் பரவல் தடுப்புப் பணியில் சீனா மேற்கொண்டு வரும் முயற்சிக்குக் களங்கம் ஏற்படுத்துவதில் சுறுசுறுப்பாக உள்ளன. எடுத்துக்காட்டாக, அமெரிக்க குடியரசுக் கட்சியின் செனட் அவை உறுப்பினரான டோம் கெர்டன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், கெரோனா வைரஸ், வூ ஹானில் கடும் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு உயிரின வேதியியல் ஆய்வகத்திலிருந்து தான் வெளியேறியது என்று கூறினார். இந்தப் பேச்சுக்கு, ஆதாரம் எதுவும் இல்லை.

இது போன்ற கட்டுக்கதைகளைக் கூறுபவர்களில் பெரும்பாலானோர் முன்பிருந்தே சீனாவுக்கு எதிரானவர்களாக இருப்பது, எளிதாகத் தெரிகிறது. அவர்களின் கருத்தில், சீனாவில் ஏற்பட்ட நோய் பாதிப்பை இரக்கமில்லாமல் பயன்படுத்தி, வேறு நோக்கத்துடன் கட்டுக்கதையைப் பரப்பி, சீனாவுக்குக் களங்கத்தை உண்டாக்குகின்றனர்.

இது பற்றி ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற ஆவணத் திரைப்படத் தயாரிப்பாளர் ஜான் ரிச்சார்ட் பில்ஜர் கூறுகையில், புதிய ரக கொரோனா வைரஸ் பற்றிய செய்திகளை வெளியிட்ட போது, அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் சீனாவின் மீது போர் தொடுத்துள்ளது என்று கருத்து தெரிவித்தார். நியாயமற்ற இந்தப் போரினால் மனித குலத்தின் அறிவு மற்றும் மனசாட்சியைத் தோற்கடிக்க முடியாது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து பாடுபடும் இத்தருணத்தில், தீய நோக்கமுடைய சக்திகள் காயத்திற்கு மேலும் வலி ஊட்டுவதைப் போல, மனித இன ஒழுக்க நெறியின் அடிப்படை எல்லையைத் தாண்டியுள்ளது.

# கொடாக்கண்டனும் விடாக்கண்டனும்!


**ஐ**க்கிய தேசியக் கட்சிக்குள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் நடைபெறும் அதிகாரப் போராட்டம் தீவிரமடைந்திருந்தாலும் இப்போராட்டத்தில் ரணில் மீண்டுமொருமுறை வெற்றியீட்டியிருக்கிறார். அதாவது கட்சித் தலைவர் பதவியை மீண்டும் தக்க வைத்துக்கொண்டிருக்கிறார்.

இருவருக்குமிடையிலான போராட்டம் சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. இடையில் 2015இல் ஐ.தே.க. தலைமையிலான அணியினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதால் அதிகாரப் போட்டி சற்று தளர்ந்துபோய் இருந்தது. ஆட்சியை இழந்ததும் அது மீண்டும் முன்னணிக்கு வந்திருக்கிறது.

இந்த அதிகாரப் போட்டியின் மைய விடயம் ரணில் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகி அதை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே. ஆனால் ரணில் அதற்கு இடம் கொடுக்காமல் பல்வேறு சாக்குப்போக்குகளைச் சொல்லியும், குள்ளத்தனமான தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தியும் தலைவர் பதவியை தக்கவைத்து வருகின்றார். இருப்பினும் விக்கிரமாதித்தன் கதைபோல சஜித் தனது முயற்சியைக் கைவிடாதவராகவே இருக்கிறார்.

கடந்த நொவம்பர் 16இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சஜித்தை வேட்பாளராக நியமிப்பதற்கும் கட்சித் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் அவரது ஆதரவாளர்கள் கட்சிக்குள் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தினர். இரண்டையும் சஜித்துக்கு வழங்க முடியாது என விடாப்பிடியாக நின்ற ரணில் இறுதியில் பணிந்து வந்து ஜனாதிபதி வேட்பாளராக சஜித் போட்டியிடுவதற்கு மட்டும் சம்மதம் தெரிவித்தார். இதற்கும் ரணிலின் கள்ள நோக்கமே பின்னணியில் இருந்தது. அதாவது தானோ அல்லது சஜித்தோ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிந்துகொண்டே ரணில் சஜித்துக்கு வழிவிட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்று அவரது




அணியினர் அரசாங்கம் ஒன்றை அமைத்த பின்னர், யார் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பது என்பதில் ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையில் மீண்டும் மோதல் ஆரம்பமானது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்காவிடின் தான் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து அதன் சார்பில் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதாக சஜித் மிரட்டியதால் ரணில் அந்தப் பதவியையும் அவருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

**பரிபூரணன்**

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தும் கூட சஜித்தின் ‘பசி’ அடங்கவில்லை. எப்படியும் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதிலேயே சஜித் குறியாக இருந்தார். ஏனெனில் ஐ.தே.கவை பொறுத்தவரையில் கட்சியின் தலைவர் பதவியில்லாமல் வேறு எந்தப் பதவியை வகித்தாலும் அது செல்லாக்காசு என்பது சஜித்துக்கு தெரியும்.

ஆனால் மாமன் ‘குள்ளநரி’ ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை விட அரசியலில் பல மடங்கு குள்ளரான ரணில் சஜித்தின் தலைவர் பதவி ஆசைக்கும் வேட்டு வைத்துவிட்டார். அதாவது ஐ.தே.கவின் சர்வ வல்லமை வாய்ந்த ‘செயற்குழு’வைக் கூட்டி அங்கு தனக்கிருக்கும் பெரும்பான்மையைப் பயன்படுத்தி தானே தொடர்ந்தும் கட்சித் தலைவராகத் தொடர்வதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டார். இந்தக் கூட்டத்தை சஜித்துக்கு ஆதரவான உறுப்பினர்கள் பகிஸ்கரித்ததால் ரணிலுக்கு அது மேலும் வசதியாகப் போய்விட்டது.

அதேநேரத்தில், சஜித் தலைவர் பதவிக்கான தனது போராட்டத்தை நிறுத்தமாட்டார் என்பதும் ரணிலுக்கு தெரியும். எனவே அதை முறியடிப்பதற்கான வழிவகையையும் ஏற்படுத்திவிட்டார் ரணில். அதாவது, அடுத்த பொதுத்தேர்தலின் போது பிரதமர் வேட்பாளராக கட்சியின் சார்பாக சஜித்தை நிறுத்துவது எனவும், அதற்காக உருவாக்கப்படும் பல கட்சிகள் கொண்ட முன்னணியின் தலைவர் பதவியையும் சஜித்துக்கே வழங்குவது எனவும் ரணில் தீர்மானித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்திலும் ரணிலின் குள்ளத்தனம் மறைந்துள்ளது. அதாவது, அடுத்த பொதுத்தேர்தலில் ஜனாதிபதி கோத்தபாய அணியே அமோக வெற்றி பெறும் என்பதும், சஜித் மண் கவ்வுவார் என்பதும் ரணிலுக்குத் தெரியும். தான் தொடர்ந்து சுமார் 20 தேர்தல்களில் தோல்வியடைந்தது போல, சஜித்தும் ஜனாதிபதி தேர்தல், பிரதமர் பதவி தேர்தல் என்பனவற்றில் தொடர்ந்து தோல்வியடையட்டும் என்பதே ரணிலின் அந்தரங்க நோக்கம். பொதுத்தேர்தலில்

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# சவேந்திர சில்வா மீதான தடை!
# பிரதமர் மஹிந்தவின் முக்கிய அறிவிப்பு




**ஸ்ரீ**லங்கா இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அமெரிக்கா விதித்த பயணத் தடைக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கடந்த ஐக்கிய தேசியக் கட்சியே அடிப்படைக் காரணம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச குற்றம் சாட்டியிருக்கின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் – ஜே.வி.பியும் இணைந்து ஆதரவளித்து ஆட்சிபீடம் ஏற்றிய ரணில்–மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் ஜெனீவா தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியதாலேயே ஸ்ரீலங்கா படையினருக்கு எதிராக போர்க் குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ச அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா எவ்வாறான போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களை செய்தார் என்று தெரியாமலும், ஆதாரங்கள் இன்றியும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா பயணத் தடையை விதித்திருப்பதாக பிரதமர் மஹிந்த குற்றம்சாட்டியுள்ளார்.

எந்தவொரு குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படும் வரை சம்பந்தப்பட்ட நபர் நிரபராதியே என்று அறியப்பட வேண்டும் என்பது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த நடைமுறை இலங்கை இராணுவத் தளபதிக்கும் அவரது குடும்பத்தினர் விடயத்திலும் பின்பற்றப்படவில்லை என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின் எதேச்சாதிகாரமான இந்தப் பயணத் தடைக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் கண்டனத்தை வெளிவிவகார அமைச்சு நேரடியாக தெரியப்படுத்தியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய ரணில் – மைத்ரி அரசாங்கத்தின் இணை அனுசரணையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட 30 இன் கீழ் ஒன்று தீர்மானம் காரணமாகவே இலங்கை படையினருக்கு எதிராக இவ்வாறு வேறு நாடுகளினால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் பாரிய அளவில் சுமத்தப்படுவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் இலங்கை இராணுவத் தளபதி உள்ளிட்ட அரச படைத் தளபதிகளுக்கு எதிரான வெளிநாடுகள் முன்னெடுக்கும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றி அதனை பாதுகாத்து வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் ஏனைய தரப்பினரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் மஹிந்த தெரிவித்துள்ளார்.

ஜெனீவா தீர்மானத்தின் முதலாவது பிரிவிலேயே இலங்கை படையினருக்கு எதிரான மனித உரிமைகள் மீறல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய நிபுணர்கள் குழு தயாரித்த அறிக்கையை வரவேற்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் ஐ.நா செயலாளர் நாயகத்தினால் உத்தியோகபற்றற்ற ரீதியிலேயே மூவரடங்கிய குழு அமைக்கப்பட்டதாகவும் கூறும் மஹிந்த, அவ்வாறான நிலையில் குறித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட போரின் பின்னர் இலங்கை படை மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி உள்ளிட்டோர் அதை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச குற்றம்சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த 30 இன் கீழ் ஒன்று என்கிற தீர்மானத்திலிருந்து விலகுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அமெரிக்கா விதித்துள்ள இந்த பயணத் தடையானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டுத் தண்டனையளிக்கப்படும் முறையை நினைவுபடுத்துகின்ற போதிலும் நல்லாட்சி கூட்டில் இருந்தவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவே இல்லை என்றும் பிரதமர் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயணத்தடையை நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது தற்போதைய அரசாங்கத்தின் கடமையாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருப்பதன் ஊடாக 2015 ஆம் ஆண்டு அவர்கள் செய்த மிகப்பெரிய காட்டிக் கொடுப்பை மறைப்பதற்கான கூற்றாகவே அதனை தான் பார்ப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவிற்கு மிகப் பெரிய வெற்றியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே அமெரிக்கா தேர்தல் நெருங்கிவரும் சூழலில் பயணத் தடையை விதித்திருப்பதாக ஜே.வி.பி கூறியுள்ளதன் ஊடாக அமெரிக்காவின் பயணத் தடையை அவர்களும் மறைமுகமாக வரவேற்றிருப்பதாகவும் மஹிந்த குற்றம் சாட்டியுள்ளார்.

நல்லாட்சிக் காலத்தில் மேற்குலக நாடுகளின் சக்திகளை எதிர்ப்பதாக நாடகம் ஆடிய ஜே.வி.பி இன்று இராணுவத் தளபதிக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடையை குறைந்த பட்சம் கண்டனம் தெரிவிக்கவும் இல்லை என்பதையும் நாட்டு மக்கள் நன்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.


இந்த நாடு மற்றும் மக்கள் குறித்து சிந்திக்கும் தேசப்பற்று சிந்தனையுடைய சக்திகள் இருக்கின்ற அதேவேளை தேசத்தை காட்டிக் கொடுக்கும் சந்தர்ப்பம் வரும்வரை காத்திருக்கும் தேசத்துரோக சக்திகளும் இருப்பதை இந்தப் பயணத் தடையின் ஊடாக அடையாளம் காணமுடிந்துள்ளதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் ஒரு வாரத்தில் விற்றுத்தீர்ந்த ஒரு லட்சம் 'கம்யூனிஸ்ட் அறிக்கை'

கார்ல் மார்க்ஸ்: மிகச் சிறந்த சிந்தனையாளர், தத்துவவாதி, எழுத்தாளர், சமூகக் கோட்பாட்டாளர் மற்றும் பொருளாதார நிபுணர், உழைக்கும் மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர். முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசம் பற்றிய கோட்பாடுகளுக்குப் பிரபலமானவர்.

இவர், பிரெட்ரிக் ஏங்கெல்ஸுடன் இணைந்து, 'கம்யூனிஸ்ட் அறிக்கை' (Communist Manifesto) எனும் புத்தகத்தை 1848 ஆம் ஆண்டு பெப்ரவரி 21-ம் திகதி முதற்பிரதியை இலண்டனில் வெளியிட்டார். அதாவது இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டு 172 ஆண்டுகள் ஆகின்றன. அப்போது, கார்ல் மார்க்ஸால் வெளியிடப்பட்ட இந்தப் புத்தகம், இன்று வரை உலகம் முழுவதும் கம்யூனிஸ்டுகளால் கொண்டாடப்பட்டு வருகிறது. 'கம்யூனிஸ்ட் அறிக்கை' இப்போது கிட்டத்தட்ட உலகின் அனைத்து மொழிகளிலும் கிடைக்கப் பெறுகிறது. நமது காலத்தில் மிக மிக அதிகமாக வாசிக்கப்பட்ட வெகுசில நூல்களில் இதுவும் ஒன்று.

கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களால் பெப்ரவரி 21-ம் தேதியை சிவப்புப் புத்தக தினமாக அறிவிக்கப்பட்டு, சூரியன் உதிக்கும் ஜப்பானிலிருந்து சூரியன் மறையும் சிலி வரை உலகம் முழுவதும் வாசிக்கப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் காரணமாக சீனா மற்றும் கொரியா நாடுகளில் மட்டும், இந்த வருடம் சிவப்புப் புத்தக தினம் கொண்டாடப்படவில்லை. தமிழகத்தைப்




பொறுத்தவரை 10,000-த்துக்கும் மேற்பட்ட இடங்களில் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' புத்தகம் 21.02.2020 இல் வாசிக்கப்பட்டது.

இந்த புத்தக வாசிப்பை முன்னிட்டு, 21.02.2020 இல் சென்னையில தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், ஜி.நாகராஜன் சிறப்புரையாற்றினார், சிவப்புப் புத்தக தினத்திற்காக அச்சடிக்கப்பட்ட ஒரு லட்சம் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' புத்தகம் ஒரே வாரத்தில் விற்றுத் தீர்ந்துபோயின என்று தமிழக கம்யூனிஸ்ட்டுகள் தெரிவித்துள்ளனர்.

-கு.தினகரன் (விகடன்)

11ம் பக்கத்தொடர்ச்சி…

சஜித் தோல்வியடைந்த பின்னர் சீர்குலைந்து போகும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைப் பதவியும் சஜித்தை விட்டு அகன்றுவிடும். அதன்பின்னர் கட்சிக்குள் சஜித்தின் செல்வாக்கு இறங்குதிசைக்கு சென்றுவிடும் என்பதே ரணிலின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு திட்டமிட்டு ரணில் சஜித்துக்கு எதிராகக் காய் நகர்த்தி வருகிறார். இதுவரை சஜித்திடம் தற்காலிகப் பதவிகள் என்ற ஆயுதங்களை ரணில் ஒவ்வொன்றாக இழந்து வந்தாலும், மார்புக் கவசம் என்ற கட்சித் தலைவர் பதவியை இழக்காமல் ரணில் தன்னைக் காப்பாற்றி வருகின்றார்.

ரணில் கொடாக்கண்டனாக நின்றாலும், விடாக்கண்டனான சஜித் கட்சித் தலைவர் பதவிக்கான போராட்டத்தை அடுத்த பொதுத்தேர்தல் தோல்வியின் பின்னரும் நிறுத்திக் கொள்வாரா என்பதுதான் கேள்வி. (chakkaram.com)

"மிகச்சிறந்த சிந்தனையாளர் தன் சிந்தனையை நிறுத்திக்கொண்டார்", என்று மாமேதை கார்ல் மார்க்சின் கல்லறையில் நிகழ்த்திய இரங்கல் உரையில் அவரது உற்ற தோழரும் மார்க்சிய மூலவர்களில் ஒருவருமான பிரெடெரிக் ஏங்கெல்ஸ் கூறினார். மார்க்ஸ் மறைந்து 137 ஆண்டுகள், ஏங்கெல்ஸ் காலமாகி 125 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவர்கள் இருவருமாகச் சேர்ந்து உருவாக்கி உலகிற்கு அளித்த 'கம்யூனிஸ்ட் அறிக்கை' நூல் வெளியாகி 172 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால், அந்தச் 'சிவப்புப் புத்தகம்' இன்றும் காலத்தை வென்று உயிர்ப்போடும், புத்துணர்ச்சியோடும் இருக்கிறது.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

ஏதாவது எடுக்கப்பட்டால் அதை சிங்கள இனவாதிகள் குழப்ப வேண்டும். இடையிடையே தமிழ் மக்கள் மீது இன வன்செயல்களை நடத்த வேண்டும்.

இந்த விடயங்களைப் பொறுத்தவரை, ஐ.தே.க. தலைமை மேற்படி விடயங்களை கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக கனகச்சிதமாக அரங்கேற்றி வந்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை இவை:

□ சுதந்திர இலங்கையின் முதலாவது பொதுத்தேர்தல் 1947இல் நடந்த கையோடு இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது.

□ வடக்கு கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது.

□ 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான இன வன்செயல்களை முன்னின்று நடத்தியது.

□ இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1957 இல் செய்யப்பட்ட பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம், 1987இல் செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம், 2000ம் ஆண்டில் சந்திரிக அரசால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம் என்பனவற்றைக் குழப்பியது.

□ 1981இல் யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது தென்னிலங்கையிலிருந்து காடையர்களைக் கொண்டு சென்று தேர்தலில் மோசடி செய்ததுடன், யாழ்.பொது நூலகம், யாழ்.நகரக் கடைகள், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், நாச்சிமார் கோயில் தேர், யாழ்.தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லம் என்பனவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியது.

இப்படிப் பல கைங்கரியங்கள் ஐ.தே.க. தலைமையால் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளன. இருந்தும் அன்றிலிருந்து இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை வரை எல்லாத் தமிழ்த் தலைமைகளுமே ஐ.தே.கவுடனேயே உறவு வைத்து வந்துள்ளன, வருகின்றன. அதற்குக் காரணம் ஐ.தே.க. செய்யும் இத்தகைய செயல்கள்தான் தமிழ் தலைமைகள் தமிழ் மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கிளறி வாக்குப் பெறவும், தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவும் உதவி வருகின்றன.

இன்னொரு பக்கத்தில் முஸ்லீம் தலைமைகளை எடுத்துக்கொண்டால் அவை வேறு சில நோக்கங்களுக்காக ஐ.தே.கவை ஆதரித்து வருகின்றன.

ஆரம்ப காலத்தில் முஸ்லீம் மக்களுக்கு தலைமைதாங்கிய டாக்டர் கலீல் தலைமையிலான முஸ்லீம் லீக், சேர்.ரசீத் பரீத் தலைமையில் இருந்த சோனக இஸ்லாமிய சங்கம் என்பன கொழும்பு முஸ்லீம் வர்த்தக சமூகத்தைத் தலைமையாகக் கொண்டிருந்ததுடன், ஐ.தே.கவின் கிளைகள் போலவே செயல்பட்டன.

இந்த நிலைமையை மாற்றவும், இந்த மண்ணின் மைந்தர்களான உண்மையான முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவுமே அஸ்ரப் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசை உருவாக்கினார். அதில் அவர் வெற்றியும் பெற்றார்.

ஆனால் அவருடைய துரதிஸ்டவசமான மறைவுக்குப் பின்னர், தலைமையைக் கைப்பற்றிய ஹக்கீம் தலைமையில் முஸ்லீம் வர்த்தக சமூகம் முஸ்லீம் காங்கிரஸ் தலைமையைக் கைப்பற்றி அதை முன்னர் போல ஐ.தே.கவின் வாலாக மாற்றியுள்ளது. இன்னொரு முஸ்லீம் தலைமையான ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசும் அதே பாதையையே பின்பற்றுகிறது. இந்த இரு தலைமைகளும் ஐ.தே.கவுடன் கூட்டு வைத்திருக்கின்ற அதேநேரத்தில், தமது இருப்புக்காக தமிழ் – சிங்கள மக்களுக்கெதிரான முஸ்லீம் இனவாதத்தையும் பயன்படுத்துகின்றன.

ஆக, மொத்தத்தத்தில் இன்றைய தமிழ் தலைமையும், முஸ்லீம் தலைமைகளும் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுடைய நலன்களை விட தமதும், தமது சமூகத்திலுள்ள வசதி படைத்தவர்களினதும் நலன்களைப் பாதுகாப்பதிலேயே முனைப்பாக உள்ளன. அவ்வாறு அவர்கள் தமதும் தமக்கு வேண்டப்பட்டவர்களதும் நலன்களைப் பாதுகாப்பதானால், அதற்கு ஏதுவான கட்சி முதலாளித்துவ, பிற்போக்கு, பேரினவாத ஐ.தே.க. கட்சியே. அதனால்தான் தென்னிலங்கையிலுள்ள ஏனைய கட்சிகளை விட ஐ.தே.க. சிறுபான்மை இனங்களுக்கு ஆகக்கூடுதலான அநியாயங்களைச் செய்த போதிலும், உதைத்த காலை நக்குவது போல இந்த இரு தலைமைகளும் ஐ.தே.கவின் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றன.

இந்த நிலைமையில் தமிழ் – முஸ்லீம் மக்கள் தற்போதைய தமது தலைமைகளையும், அவை சோரம் போயிருக்கிற ஐ.தே.க. தலைமையையும் தொடர்ந்தும் ஆதரிப்பதால் ஏதாவது பயன் உண்டா என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானதாகும். அதுவும் விரைவில் நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறப்போகின்ற சூழலில் அவர்கள் தமது நிலைப்பாடு பற்றி ஆழமாகச் சிந்திப்பது அவசியமாகின்றது.

ஒரு பக்கத்தில் அவர்கள் இந்த விடயத்தைக் கொள்கை சார்ந்து சிந்திக்கின்ற அதேநேரத்தில், மறுபக்கத்தில் நடைமுறை சார்ந்தும் தந்திரோபாயம் சார்ந்தும் சிந்திக்க வேண்டும்.

அதாவது, கொள்கை சார்ந்து என்று சிந்திக்கும்போது, இன்றைய சூழலில் தவிர்க்க முடியாது நாட்டை ஆள வாய்ப்புள்ள இரண்டு பிரதான கட்சிகளில் ஒப்பீட்டுவகையில் எது சிறந்தது என்பதை ஆராய்ந்து தீர்மானிப்பது அவசியமானது.

அந்த வகையில், நாட்டின் தேசிய நலன்களுக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகளின் நலன்களையும், உள்நாட்டு பெரும் முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளின் நலன்களையும் பாதுகாக்கின்ற ஐ.தே.கவை ஆதரிப்பதா அல்லது ஒப்பீட்டு வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்டதும், நாட்டினதும் மக்களினதும் நலன்களையும் முதன்மைப்படுத்துகின்றதுமான சிறீலங்கா பொதுஜன பெரமுன – சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக்கட்சிகள், தேசப்பற்றுள்ள சக்திகள் கொண்ட கூட்டை ஆதரிப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

அதேநேரத்தில், நடைமுறை சூழல் மற்றும் தந்திரோபாயம் என்பனவற்றைப் பார்த்தோமானால், தற்போது ஐ.தே.கவுக்கு எதிரான உறுதியான ஒருவரான கோத்தபாய ராஜபக்சவே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருக்கின்றார்.

அதுமாத்திரமின்றி, விரைவில் நடைபெறப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் எவ்வித சந்தேகமுமின்றி, அவரது அணியினரே வெற்றிபெற்று ஆட்சியமைக்கப் போகின்றனர். எனவே அடுத்த 5 வருடங்களுக்கு அவர்களது அரசாங்கமே நாட்டை நிர்வகிக்கப் போகின்றது.

இத்தகைய ஒரு சூழலில் தமிழ் - முஸ்லீம் மக்கள் தமது தலைமைகளின் தவறானதும், புத்திசாதுரியமற்றதுமான சொல்லைக் கேட்டு ஜனாதிபதித் தேர்தலின்போது ஐ.தே.க. வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தது போல மீண்டும் ஒரு தவறைச் செய்து, அடுத்த 5 வருடங்களும் எதையும் பெற முடியாத அனாதைகளாக நிற்கப் போகின்றார்களா? அல்லது தமது தலைவிதியை மாற்றி அமைக்கப் போகின்றார்களா என்பதே முக்கியமான கேள்வியாகும். பொதுத்தேர்தல் நடைபெறப் போகின்ற சூழலில் இது ஒரு முக்கியமான கேள்வியாகும்.

இதற்கான ஒரேயொரு பதில், தமது சொந்த நலன்களுக்காக தொடர்ந்தும் ஐ.தே.கவுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், ஹக்கீம் - ரீசாத் தலைமையிலான முஸ்லீம் தலைமைகளையும், மனோ கணேசன் தலைமையிலான இந்திய வம்சாவழித் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கூட்டணியையும் தமிழ் - முஸ்லீம் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்பதுதான்.

அவ்வாறு செய்யாமல் தொடர்ந்தும் தமிழ் - முஸ்லீம் மக்கள் இந்தக் கட்சிகளுக்கு வாக்களித்தால், அது பொதுத்தேர்தலில் படுதோல்வி அடையப்போகின்ற ஐ.தே.கவுக்கு வாக்களிப்பதாக அமைவதுடன், இந்த மக்கள் அடுத்த 5 வருடங்களுக்கு அரசியல் வனாந்திரத்தில் சஞ்சரிக்கும் நிலையும் ஏற்படும் என்பதையும் உணர்ந்து கொள்வது அவசியம்.

# தொலைக்காட்சியில் இருந்து குழந்தைகளை காப்பாற்றுங்கள்

பல்வேறு நல்ல விஷயங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தொலைக்காட்சி என்பது தற்போது மனிதர்களின் நேரத்தை விழுங்கும் பூதமாக உருமாறி வருகிறது. வெறும் நேரத்தை மட்டுமல்லாமல், குழந்தைகளின் பழக்க வழக்கங்களை கூட மாற்றி விடுகிறது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் தொடர்களும், விளம்பரங்களும் பெரும்பாலும் குழந்தைகளையும், பெண்களையும் குறிவைத்தே படமாக்கப்படுகின்றது.

உங்கள் குழந்தைகள் தொலைக்காட்சியின் முன்னால் உறைந்து போயிருக்கிறார்களா? அப்படியென்றால் இது உங்களுக்காகத்தான். தொலைக்காட்சியை அதிகமாகப் பார்க்கும் குழந்தைகள், குறைவாகப் பார்க்கும் குழந்தைகள் என்று 500 பேரை வைத்து சிங்கப்பூரில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள் புகழ்பெற்ற 'லான்செட்' மருத்துவ இதழில் வெளியிடப்பட்டு இருக்கின்றன. இதன்படி 2 அல்லது 3 வயதுக் குழந்தைகள் தொலைக்காட்சிக்கு முன்னால் 3 மணி நேரம் செலவிட்டால், அவர்கள் ஐந்தரை வயதில் சோம்பேறிகளாக ஆகிவிடுவார்கள். அது மட்டுமல்லாமல் உடல் பருமன், அறிதிறன் குறைபாடு போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. மனநிலை சார்ந்த பிரச்சினைகளும், மூளையின் இயக்கம் சார்ந்த பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இந்தக் குழந்தைகளால் மற்றவர்களுடன் சகஜமாக நட்புகொள்ள முடியாது. சமூகத்திலிருந்து அந்நியமாகிவிடுவார்கள் என்றெல்லாம் அந்த ஆய்வு எச்சரிக்கின்றது.

அலுவலகம் சென்றுவரும் பெற்றோர்கள் மாலையில் வீட்டு வேலைகள் பார்க்கும்போது, குழந்தைகள் இடையூறாக இருப்பார்கள் என்று தொலைக்காட்சியை இயங்க வைத்துக் குழந்தைகளை அதன் முன் உட்கார வைத்துவிடுவதே இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம். இதற்கான தீர்வு பெற்றோர்களிடம்தான் இருக்கிறது. குழந்தைகளின் படைப்பூக்கத்தை வளர்க்கும் விதத்தில் அவர்களுடன் நேரம் செலவிட்டாலொழிய இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

### ***ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் விளம்பரங்கள்***

ஒரு குழந்தை ஒவ்வொரு ஆண்டும் 1000 விதமான தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்க்கின்றனர் என்கிறது ஓர் ஆய்வு. பெரும்பாலும் உடலுக்கு கேடு விளைவிக்கும் குளிர்பானங்களும், நொறுக்குத் தீனி நிறுவனங்களும் கொடுக்கும் விளம்பரத்தைப் பார்த்து அவற்றை சாப்பிட விரும்புகின்றனர். இதனால் அவர்களது உடல்நிலை கெடுகிறது.

ஒரே இடத்தில் உட்கார்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே நொறுக்குத் தீனியை உண்பதால் உடல் பருமன், விளம்பரத்தைப் பார்த்து கண்டதையும் சாப்பிடுவதால் சத்துணவு பற்றாக்குறை, தொலைக்காட்சியை மிக அருகில் பார்ப்பதால் கண் பார்வை குறைபாடு, எந்த சிந்தனையும் இன்றி தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டே இருந்தால் மூளை வளர்ச்சி குறைவது,



ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது அதை கவனிக்க இயலாமை, பேய், பாம்பு படங்களைப் பார்ப்பதால் அதன் மீதான பயம், இரவில் மிகக் கொடூரமான படங்களைப் பார்ப்பதால் தூக்கம் இழந்து தவித்தல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

குழந்தைகள் ஒரேயடியாக தொலைக்காட்சியை பார்க்காமல் இருப்பது என்பது இயலாத விஷயம். அது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிடும். அவ்வாறு இல்லாமல், குறிப்பிட்ட சில நேரத்தை மட்டும் ஒதுக்கி தொலைக்காட்சியை பார்க்க அனுமதிப்பதுதான் சிறந்த வழி. குழந்தைகள் பாடசாலையில் இருந்து வந்தவுடன் வெளியில் சென்று விளையாடிவிட்டு, வீட்டுப் பாடங்களை முடித்துவிட்டு, பின்னர் ஒரு சில மணி நேரம் டிவி பார்க்க அனுமதிக்கலாம். அதுவும் நல்ல நிகழ்ச்சிகளைத் தேர்வு செய்து பார்க்க வைக்கலாம். சில விரும்பத்தகாத சனல்களை டிவியில் ஒளிபரப்பாகாத வகையில் தடை செய்து விடுங்கள், தொலைக்காட்சியைப் பார்த்து பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான மறைமுகமான பதிலைக் கூறுங்கள். உங்களிடம் கிடைக்காத பதிலை பிள்ளைகள் வெளியில் தேட ஆரம்பித்தால் பிரச்சனைதான் ஏற்படும்.

# அமெரிக்காவின் தடைக்கு ரணிலும் மங்களவுமே காரணகர்த்தாக்கள்!

## டியு குணசேகர குற்றச்சாட்டு

இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவோ, அவரது குடும்ப உறுப்பினர்களோ அமெரிக்காவுக்குள் நுழைய முடியாதவாறு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. புலிகளுடனான இறுதி யுத்த காலத்தின் போது யுத்தகளத்தில் முக்கியமான கட்டளைத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா போர்க் குற்றங்கள் இழைத்துள்ளார் என்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டே அமெரிக்கா இந்தத் தடையை விதித்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து கொழும்பில் சோசலிச முன்னணி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டியு குணசேகர பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார்:

"சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்திருக்கிற தடையானது எமது நாட்டின் கௌரவம் மற்றும் இறையாண்மைக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர மற்றும் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே காரணகர்த்தாக்கள்.

போர்க்குற்றம் தொடர்பாக இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கத் தீர்மானித்தது. அதற்கான ஆவணத்தில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கைச்சாத்திட்டிருந்தார். பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமையவே மங்கள சமரவீர இதனை மேற்கொண்டிருந்தார். அன்று மங்கள சமரவீர கைச்சாத்திட்டதின் பின்விளைவையே தற்போது நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்"



இவ்வாறு டியு குணசேகர கூறியிருக்கிறார்.

இதேவேளையில், இந்த விவகாரம் சம்பந்தமாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவரை அழைத்து இலங்கையின் ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் மறுபக்கத்தில் அமெரிக்கா இலங்கை இராணுவத்தளபதி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் விதித்துள்ள தடையை தமிழரசுக் கட்சி பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வரவேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கிறார்.

ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால் இராணுவத் தளபதியும், பாதுகாப்புத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் அவரது உடனடிக் குடும்பத்திற்கு விதிக்கப்பட்ட பயணத் தடைகள் குறித்து இலங்கையின் கடுமையான ஆட்சேபனைகளை அமெரிக்கத் தூதுவர் அலினா டெப்லிட்ஸிடம் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன (2020 பெப்ரவரி 16) தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை (2020 பெப்ரவரி 14) அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் இது குறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டு உறவுகள் அமைச்சு இலங்கை அரசாங்கத்தின் ஆட்சேபனையை உடனடியாக வெளியிட்டது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இலங்கையை பயங்கரவாதத்திலிருந்து விடுவிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளில் லெப்டினன்ட் ஜெனரல் சில்வாவும் ஒருவர் என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் முக்கிய பதவிகளை வகிப்பதற்கு நிரூபிக்கப்பட்ட நிபுணத்துவத்துடன் கூடிய நபர்களுக்கு அழைப்பு விடுப்பதற்கான ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியின் சிறப்புரிமையை வெளிநாட்டு அரசாங்கமொன்று கேள்விக்கு உட்படுத்துகின்றமை ஏமாற்றமளிப்பதாக தெரிவித்தார். இந்த நடவடிக்கையானது அமெரிக்க – இலங்கை உறவுகளில் அனாவசியமான சிக்கல்களை ஏற்படுத்துவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், சவேந்திர சில்வாவின் சேவைக்காலம் மற்றும் அனுபவத்தினை கருத்திற்கொண்டு இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டார் என்றும் அவருக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் பற்றிய நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மீண்டும் ஒருமுறை மதிப்பாய்வு செய்ய வேண்டும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அமெரிக்க தூதுவரிடம் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் கவலைகள் தொடர்பாக மத்திய அரசாங்கத்திடம் தெரிவிப்பதாக அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் அமைச்சரிடம் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கையுடனான தொடர்ச்சியான ஒத்துழைப்பு குறிப்பாக பாதுகாப்புத் துறை உட்பட அதன் விரிவாக்கத்தை உறுதி செய்வதற்கும் அமெரிக்க அரசாங்கத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை அவர் இதன்போது மீண்டும் வலியுறுத்தினார்.